[1979 அக்டோபர் 29

சீமான் நகருக்கு மின்சக்தி வழங்கல்.

*வினா எண் 22—திரு. சீ. செல்வராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதியிலுள்ள ''சீமான் நகரில்'' மின் கம்பம் நாட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், ''ஒயர்'' இழுக்கப்படாமல் மின் இணைப்பும் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆமெனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மின் கம்பங்கள் 1979ஆம் ஆண்டு சூன் திங்களில் நடப்பட்டன.

(ஆ) 9–7–1979 அன்று மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு விட்டன.

திரு. சீ. செல்வராஜ் ; மாண்புமிகு தலைவரவர்களே ''சீமான் நகரில்,, மின் கம்பம் நாட்டப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக் கொளகிறேன். இன்னும் அதிகமான மின் கம்பங் கள் தேவைப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் நடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; நன்றிக்கு நன்றி. நன்றி உரிய வகையில் கௌரவிக்கப்படும்.

அரூர் வட்டத்திலுள்ள பிர்க்காக்கள்.

*வினா எண் 23—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டத்திலுள்ள ஆறு ரெவின்யூ பிர்க்காக்களை ஒன்பது பிர்க்காக்களாக மாற்றியமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

மாநிலம் முழுவதும் உள்ள பிர்க்காக்களை நிர்வாக வசதி களுக்கேற்பச் சிறியவைகளாகச் சீரமைக்க அரசு முடிவு செய் துள்ளது. ஹரூர் வட்டத்திலுள்ள 6 பிர்க்காக்கள் என்பது 9 பிர்க்காக்களாக அமைக்கப்பட்டிருக்கிறது.

1979 அக்டோபர் 29]

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, ஹூரூர் வட்டத்திலுள்ள 6 பிர்க்காககள் 9 பிர்க்காக்களாக மாற்றி அமைக்கப்பட்டிருப்பதாக ஒரு அறிவிப்பைச் சொன்னார்கள், அறிவிப்பிற்கு நன்றி. எப்பொழுதிலிருந்து இந்தப் பிர்க்கா பிரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே நடைமுறையில் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: இப்பொழுது இந்த பிர்க்காக்களை பிரிக்கக் கூடிய நேரத்தில் எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகிறது. ஜனத்தொகையின் அடிப்படையிலா? விஸ்தீரணத்தின் அடிப்படையிலா? சில இடங்களில் மிகப் பெரியதாகவும், சில இடங்களில் சிறியதாகவும் இருக்கிறது. மக்களுடைய காரியங்களை ஆற்றிடுவதற்குத் தடையாக இருப்பதால், ஜனத்தொகை அல்லது விஸ்தீரணத்தின் அடிப்படையில் மற்றப் பிர்க்காக்களையும் பிரிக்கும் ஆலோசனை அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்படி வருவாய்த் துறை ஆரம்பித்த காலத்திலிருந்து, 200 ஆண்டுகாலமாக இருந்து வந்திருக்கிறது. அந்தக் காலத்தில் எதன் அடிப்படையில் இப்படி ஏற்படுத்தப்பட்டது என்பது நமக்குத் தெரியாது. ஜனத்தொகை, நிலத்தின் பரப்பு, இடத்தின் பிற்பட்ட தன்மை, வருவாய், மக்களுடைய தேவை இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து தமிழகம் பூராவும் ஒரே சீரான அமைப்பாக இன்றைக்கு வருவாய் சரகங்களைப் பிரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலில் 769 பிர்க்காக்களாக இருந்தது இன்றைக்கு மேலும் அதிகமாக 350 பிர்க்காக்கள் அரசு அறிவித்து இருக்கிறது. இதற்கு கூடுதல் செலவு ரூ. 50·07 இலட்சம் ஆகிறது. எல்லா இடங்களிலும் செய்யப் பட்டுக் கொண்டிருக்கிறது. கூடிய வரையிலும் மையப் பகுதியில் இது அமைக்கப்பட்டு இருக்கிறது. நடப்பு நிதியாண்டில் (79–80-ல்) 250 பிர்க்காக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, ரெவின்யூ கிராமங்களைப் பிரித்திருப்பதில் சில இடங்களில் 20,000 மக்களும் 200 ஏக்கருக்கு மேல் நிலமும் இருக்கிற அமைப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சில இடங்களில் மிகக் குறைந்த மக்கள் தொகையும், நிலப்பரப்பும் உள்ள பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாக் கிராமங்களும் (ரெவின்யூ) ஒரே அளவு ஜனத்தொகையும் நிலப்பரப்பையும் உள்ளடக்கியவையாகப் பிரிப்பதற்கு இந்த அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி.சோமசுந்தரம் : தலைவரவர்களே சில ரெவின்யூ பிர்க்காக்களில் 50 கிராமங்கள் இருக்கின்றன. சிலவற்றில் 8 கிராமங்கள் இருக்கின்றன. இன்னும் சிலவற்றில் 30 இருக்கின்றன. ஒரே சீராக இல்லை என்பதை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. இன்றைக்கு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் சீராக இல்லை என்று குறிப்பாக நீங்கள் சொன்னால் சீராக்கு வதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். விளக்கம் சரியாக இருந்தால் சரியென்று ஏற்றுக் கொள்கிறேன். இல்லையென்றால் மறுத்துச் சொல்கிறேன்.

## தஞ்சை மாவட்டத்தில் உப்பளத் தொழில்.

*வினா எண் 24—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த வட்டங்களில் உப்பளங்கள் உள்ளன ?

(ஆ) ஒவ்வொரு வட்டத்திலுமுள்ள உப்பளங்களின் பரப்பளவு எவ்வளவு ?

(இ) அரசுக்கு சொந்தமான உப்பளங்களிலிருந்து குத்தகை வருமானம் எவ்வளவு ?

(ஈ) உப்பளத் தொழில் மூலம் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளன ?

(உ) வரி மூலம் அரசிற்கு ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி வட்டங்களில் மட்டுமே உப்பளங்கள் உள்ளன.

(ஆ) பட்டுக்கோட்டை வட்டத்தில் ஏக்கர் 526.16 செண்டு நிலமும், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் ஏக்கர் 35,012.22 செண்டு நிலமும் உப்பளங்களாக உள்ளன.

(இ) பட்டுக்கோட்டை வட்டத்தில் ரூ. 1,492-ம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் ரூ. 64,750-ம் வருமானம் கிடைக்கிறது.

(ஈ) பட்டுக்கோட்டை வட்டத்தில் 1,057 நபர்களுக்கும், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் 4,826 நபர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.